# வண்ணாரப்பேட்டை – விம்கோநகர் மெட்ரோ ரயில்



(கோப்புப் படம்)

## மூன்று நாளில் 27,364 பேர் பயணம்

**சென்னை, பிப். 18:** வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கிய பிறகு, கடந்த மூன்று நாள்களில் (பிப்.15 முதல் பிப்.17 வரை) 27,364 பேர் பயணம்செய்துள்ளனர். இந்தவழித்தடத்தில் மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் வரையிலான முதல்கட்ட விரிவாக்க வழித்தடத்தில் திட்டப்பணிகள் முடிந்து, மெட்ரோ ரயில் சேவை பிப்ரவரி 14–ஆம்தேதி தொடங்கியது. இதையடுத்து, சென்னை மெட்ரோவின் அனைத்து வழித்தடங்களில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (பிப்.14) பிற்பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை பயணிகள் இலவசப் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்தஅறிவிப்பைதொடர்ந்து, ஏராளமான மக்கள் மெட்ரோ ரயில்களில் இலவச பயணத்தை அனுபவித்தனர். இலவச பயணத்தை தொடர்ந்து, அந்த நாளில் மட்டும் 1.40 லட்சம் பேர் பயணம் செய்தனர். குறிப்பாக, வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் மார்க்கத்தில் 39,280 பேர் இலவச பயணம் மேற்கொண்டனர்.

கடந்த திங்கள்கிழமையில் இருந்து கட்டணப் பயணம் தொடங்கியதால், இதற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி இருக்கும் என்று எதிர்பார்ப்பு நிலவியது.

இந்நிலையில், வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் வழித்தடத்தில் கடந்த மூன்று நாள்களில் மட்டும் (பிப்.15 முதல் பிப்.17 வரை) 27,364 பேர் பயணம் செய்துள்ளனர். பிப்ரவரி 15–ஆம் தேதி 9,972 பேரும், பிப்ரவரி 16–ஆம் தேதி 8,942 பேரும், பிப்ரவரி 17–ஆம்தேதி 8,450 பேரும் பயணம் செய்தனர். சராசரியாக தினசரி 8,500 முதல் 10,000 பேர் பயணம் செய்கிறார்கள்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அதிகாரிகள் கூறியது: வடசென்னை மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்வதில் மெட்ரோ ரயில் சேவை முக்கியப் பங்கு வகிக்கும். வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடர்பாக வடசென்னை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, இந்த வழித்தடத்தில் பயணம் மேற்கொள்ள வருகை தரும் பயணிகள் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரிக்கும் என்றனர்.